பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஹஸ்ரத் ஷய்க் பூஅலிகலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்.

இஃது

அய்யம் பேட்டை

S. அப்துல் றஸாக் ஸாஹிப் அவர்களால்

உர்துவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

அச்சிடப்பட்டது.

முதல் பதிப்பு.

1952

(Copy-Right Reserved.)

இதன் விலை] [அணா 4.

ஹஸ்ரத் ஷய்க் பூஅலிகலந்தர் அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

ஹஸ்ரத் ஷய்க் பூஅலிகலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (ரஹ்) அவர்கள், ஹிஜ்ரி 7-வது ஆண்டில் இர்பானுடைய ஒளியைக் கொண்டு பிரகாசித்து வந்தவர்களாவர். அவர்களது அருமைத் தந்தையார் ஹஸ்ரத் ஸாலார் பக்ருத்தீன் என்பவர்கள் அக்காலத்திய சுல்தானவர்களது ராணுவச் சேவையில் நியமனம் பெற்றிருந்தார்கள்.

அருமைக்குழந்தை ஜனித்ததும் மஷாயக் மார்களும் உலமாக்களும் உள்பட குழந்தையின் தோற்றத்தைக் கண்டு அதன் எதிர்காலபாக்கிய குணாதிசயங்களைப் பற்றி சிலாகித்துப் பேச ஆரம்பித்தார்கள். பெற்றோர்களும் அதைக்கேட்டு வல்லஇறைவனின் அருளுக்கு ஷுக்ரியாச்செய்து வந்தார்கள். பேணுதலுள்ள தாயும் குழந்தையின் எதிர்காலம் ஆண்டவனது ஜபதபங்களிலும், பயபக்திகளிலும் கழியவேண்டுமென அல்லும், பகலும் இறைவன் சந்நிதானத்தில் துவாக்கேட்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் அவர்களுடைய வமிசபரப்பரை ஹஸ்ரத்ஸையதினா இமாம் ஆஸம் (ரஹ்) அவர்கள் வரையில் எட்டுகிறது. நற்பாக்கியமுள்ள பெற்றோர்கள் குழந்தைக்கு இகபர கல்வி பயிற்சிக்குப்பின் அந்தரங்க பயிற்சி அதாவது இர்பான் வழியிலும் சற்று அறிவு புகட்டியுள்ளார்கள்.

அதற்குப்பின் ஹஸ்ரத் அவர்கள் யௌவனப்பருவத்தை அடைய நகரவாசத்தை வெறுத்து காடுகளிலும், மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் எந்நேரமும் மூழ்கியுள்ளார்கள்.

அவர்களது தியானம் அவர்களை பல்வேறு சமயங்களில் பிரக்ஞை யற்றவர்களாகவும் செய்து விடும். இவ்வாறிருந்து வருகையில் குருவின் அனுக்கிரகத்தையும் அடைய வேண்டுமென்ற அவாவும் அவர்களை வற்புறுத்திக் கொண்டிருந்தது.

ஆண்டவன் கிருபானுபவத்தால் அவர்களுக்கு வனவாச மஹானும் உன்னத பதவியும் வாய்ந்த முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸையிதினு ஆஷீக்குதா (ரஹ்) அவர்களின் அரிய தரிசனம் வாயப் பெற்றது. முர்ஷித் அவர்கள் தமது உத்துமபரம ரகசிய பார்வையைக் கொண்டு அவர்களை உற்றுப் பார்த்தார்கள். இர்பான் ஒளி ஒருவாறு அவர்கள் இருதயத்தில் பாய்ந்தது. பின்னர் பையத் என்ற அரிய பாக்கியச் செல்வமும் அடையப் பெற்றது.

ஹஸ்ரத் ஸையிதினு ஆஷிக்குதா அரும் பெரும் பதவிவாய்ந்த ஔலியாக்களிலாவர். அவர்கள் உள்ளம் எச்சமயமும் ஆண்டவனது இர்பான் ஒளியைக் கொண்டு கடலைப்போல் அலைகளை வீசிக்கொண்டிருந்தது.

அவர்கள் ஹஸ்ரத் ஷய்க் இமாமுத்தீன் அப்தால் அவர்களிடத்தில் முரீது அருள் பெற்றிருந்தார்கள். அவர்களின் உத்தம முர்ஷித் ஹஸ்ரத் காஜாபதருத்தீன் கஸ்னவி (ரஹ்) ஆவர். அவர்களது குருவை எடுத்துரைக்குங்கால் ஹஸ்ரத் சையிதினு குத்புல் ஔலியா காஜா குத்புதீன் பக்தார்காகி என்னும் திரு நாமம் மரியாதையுடன் வரையப் படுவதாகும். இத்தோரணையை யொட்டி தரீகத்வழியில் ஹஸ்ரத் பூஅலி கலந்தர் பானிபத்தி (ரஹ்) அவர்கள் சில்சிலா ஹஸ்ரத் காஜா குத்புதீன் பக்தார்காகி (ரஹ்) அவர்கள் வரையில் எட்டுவதாகும்.

ஹஸ்ரத் அவர்கள் சதா ஆண்டவனுடைய தியான போதனையை மேற்கொண்டிருந்தமையால், அவர்கள் தன்மையில் அந்நியர்களுடன் அலக்ஷியமாயும் ஓரளவிற்கு கோப மெனச் சொல்லும் படியான நிலைமையும் இருந்து வந்தது.

அவ்வாறிருந்தும் தங்களது ஆத்ம அனுக்கிரகம் சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி, சுல்தான் ஜலாலுத்தீன் ஆகியபாதுஷாக்கள் வரையிலும் எட்டியுள்ளது. அந்தபாதுஷாக்களும் இவர்களுடைய முரீது சில்சிலாவில் சம்மந்தப்பட்டிருந்தனர். இன்னமும் கணக்கற்ற விதத்தில் பற்பல ஔலியாக்களும் தங்களிடத்தில் பையத்தும் கிலாபத்தும் அடைந்துள்ளார்கள்.

பானிபத்தில் தானே தங்கள் காலத்திய ஹஸ்ரத் காஜா ஷம்சுத்தீன் துர்க என்பவர்கள் தங்கள் மஹா பதவிவாய்ந்த முர்ஷித்

ஹஸ்ரத் சையிதினுமக்தூம் அலி அஹமத் அலாவுத்தீன் சாபிர் கலியரி (ரஹ்) அவர்களுடன் இவர்களைக்கண்டு கொள்ள வந்துள்ளார்கள். அப்பொழுது இவர்களின் பிரஸ்தாபம் அளவுகடந்து முழங்கிவந்தது. ஹஸ்ரத் மக்தூம் அலி (ரஹ்) அவர்கள் முதன் முதல் தங்கள் சிஷ்யர் ஹஸ்ரத் ஷம்சுத்தீன் துர்க் அவர்களை குத்புல் அக்தாப் சமூகத்திற்கு அனுப்பியுள்ளார்கள். அவர்கள் தங்களது பிரதம சிஷ்ய ரொன்றை அனுப்பிவைத்தார்கள்.

அந்த சிஷ்யர் ஹஸ்ரத் அவர்கள் ஜாகைக்கு வந்தபொழுது ஹஸ்ரத் அவர்கள் சிங்கரூபத்தில் மிக்க கம்பீரத்துடன் விலாயத்துடைய ஆசனத்தில் வீற்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஷம்சுத்தீன் துர்க்குடைய முரீது அதைக் கண்ணுற்று பயந்துப் போய் திகைத்து நின்றார்கள். சிறிது நேரங்கழித்து அவர்கள் திரும்பிவந்து தங்கள் முர்ஷீதிடம்தாம் கண்ணுற்ற அதிசயத்தை முறையிட்டார்கள்.

ஹஸ்ரத் ஷம்சுத்தீன் துர்க் தம்முரீதுக்கு தேர்தல் மொழிகளைக் கூறி, மீண்டும் ஹஸ்ரத் கலந்தர் சாஹிப் சந்நிதானத்துக்குச் செல்லுமாறு சொன்னது மட்டுமன்றி "நீங்கள் அவர்களிடம் போங்கள். அவர்கள் இன்னமும் அதே நிலைமையில் இருப்பார்களாகில், நீங்கள் அவர்களுக்குச் சொல்லுங்கள், என்னுடைய முர்ஷித் தங்களுக்கு சலாம் அனுப்பியுள்ளார்கள். வல்ல இறைவன் சிங்கத்தின் வாசஸ்தலத்தை ஜனசஞ்சாரமற்ற காட்டில் நிர்ணயித்துள்ளான். தாங்கள் ஆண்டவனுடைய சிங்கமாக இருக்க விரும்புங்கால் மனிதவாசதலத்தை விட்டு விட்டால் தங்கள் தயவாகும்.

முரீத்மறுபடியும் வந்தபோது ஹஸ்ரத் அவர்கள் முன்போலொத்த நிலைமையிலேயே இருக்கக்கண்டார். அப்போது அவர் தம்முடைய குருவின் சலாமையும் செய்தியையும் முறையிட்டார்.

உடனே சிங்க ரூபத்திலுள்ள ஹஸ்ரத் அவர்கள் அந்தஸ்தலத்தை விட்டும் எழுந்திருந்து காட்டை நோக்கிச் சென்றார். நகரிலிருந்து வெகுதூரம் சென்ற பின்னர் அங்குள்ள ஓரிடத்தில் தங்கலானார்கள்.

ஹஸ்ரத் கலந்தர் பூஅலி அவர்கள் எந்தஸ்தலத்தில் அமர்ந்தார்களோ அந்தஸ்தலம் காலத்து வரையில் "பாநோத்தி" என்ற

ஷெய்க் பூஅலிகலந்தர் சரித்திர

பெயரால் அழைக்கப்படுகிறது. அதாவது பானிபத்திலிருந்து கிழ்திசையில் இடபெயர்க கொண்ட ஊர் நிலை கொண்டிருக்கிறது.

ஹிந்தியில் பாக் என்றால் புலி—"பாகோத்தி" புலியின் இருப்பிடம். ஹஸ்ரத் கலந்தர் சாஹிப் பல ஆண்டுகள் வரையில் 'பாகோத்தியில்' வசித்திருந்து விட்டு பிறகு "புட்டாகஹரா" என்ற ஊருக்குப் போய் வாசம் ஏற்படுத்திக் கொண்டார்கள். மேற் சொன்ன ஸ்தலம் கர்னூல்வுக்கு* அடுத்துள்ளது.

ஹஸ்ரத் வலியிநி அமீர் குஸ்ரு (ரஹ்) அவர்கள் அரசியல் பிரயாணத் தோரணையில் பானிபத் வழியே செல்ல நேரிட்டபோது ஹஸ்ரத் கலந்தர் சாஹிப் உடைய அரிய பிரசித்தியைக் கேட்டு தங்கள் சமூகத்திற்கு வந்தார்கள்.

இவர்களுடைய பதவியும், மாரிபத்துறையில் அவர்களுக்கு சமமாகவே இருந்து வந்தது.

இவ்விரு பெரியார்களுக்குமிடை விசேஷ அன்பு விசுவாசத் துடன் சம்பாஷனை நடைபெற்றது. மேற்கொண்டு சில நாட்கள் வரையிலும் அவ்விருவரும் தங்கள் பரம ரகசிய விஷயங்களைப் பற்றிப் பேசி களிப்புற்று வந்தார்கள். கடைசியாக ஹஸ்ரத் அமீர் குஸ்ரு அவர்கள் தங்கள் புறப்பாட்டிற்காக ஹஸ்ரத் கலந்தர் சாஹி பிடம் அனுமதி கேட்டார்கள் அப்போது ஹஸ்ரத் கலந்தரவர்கள் குஸ்ருவை நோக்கி "தாங்கள் எந்த முர்ஷித் அவர்களிடத்தில் பைஅத் பெற்றீர்கள்?" என்று வினவினார்கள்.

"நான் ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயிக் மஹபூபே இலாஹி நிஜாமுத்தீன் ஔலியா அவர்களிடத்தில் முரீது அருளைப் பெற் றுள்ளேன்" என்று ஹஸ்ரத் அமீர் குஸ்ரு விடைப்பகர்ந்தார்கள்.

ஹஸ்ரத் மஹபூபே இலாஹி (ரஹ்) அவர்கள் நாமத்தைக் கேட்டதும், ஹஸ்ரத் பூஅலி கலந்தர் (ரஹ்) அவர்கள் சற்று நேரம் மௌனஞ் சாதித்தப் பின்னர், "சகோதரரே! நாம் உம் முடைய முர்ஷிதை இறைவனுடைய தர்பாரில் ஒரு நாளேனும் கண்டதில்லையே" என்று மொழிந்தார்கள்.

ஹஸ்ரத் குஸ்ரு உடைய உள்ளத்தின் மீது அம்மொழிகள் அம்பு எய்தப் பட்டதற் கொப்ப வேலை செய்தன. வெகுவாக

சமாளித்துக் கொண்டு தமது மீதி மிச்சமான பிரயாணத்தை முடித்துக் கொண்டார்களாயினும் "என்னுடைய குருவின் பெரும் பதவியை அறியாத இப்பேர்ப்பட்ட தர்வேஷ்களை நான் இனி ஒரு போதும் சந்தித்துப் பேச மாட்டேன்" என்று தீர்மானித்துக் கொண்டார்கள். டில்லிக்குத் திரும்பி வந்த போது அவர்கள் பெருந் துக்கத்துடனும் மனம் நொந்தும் நிலைமையிலும் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் திரு ஆச்சிரமத்திற்கு வந்து சேர்ந்து வணக்கம் செலுத்தியதற்குப் பின் தம் துக்கத்தை கண்ணீர் ததும்ப முறை யிட்டார்கள். அதாவது :—இந்நிலைமை ஏற்படுவதற்கு முன் அவர்கள் மௌனமாய் ஹஸ்ரத் அவர்களுக்கு எதிரில் வந்த நின்ற போது ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள் க்ஷேமத்தை விசாரித்தப் பிறகு கேட்கிறார்கள்: குஸ்ருவே : நீங்கள் பூஅலி கலந்தரைக் கண்டுப் பேசினீர்களா? அவர்களைப் பற்றிய தகவல் யாது? என்று விசாரிக்கவே இவர்கள் அழுது விட்டு, சர்க்கார்! என்ன சொல்லட்டும். அவர் என் உள்ளத்தில் அம்பு எய்தி விட்டார். என்னுடைய ஆத்துமாவையும் புண் படுத்தி விட்டார். அவர் சொன்னார், நான் உங்கள் ஷைகை ஆண்டவன் தர்பாரில் கண்டதில்லையே! என்று வாய்க்கூசாது பேசி விட்டார். இதை நான் மறக்க முடியவில்லை. என்ன செய்வேன்.

ஹஸ்ரத் சுல்தானுல் ஔலியா அப்பொழுது சொல்கிறார்கள்! குஸ்ருவே! நீர் அடுத்தபடியாக எங்கள் பூஅலி கலந்தரை சந்திக்கும் பொழுது அவரிடம் சொல்லும், 'ஹஸ்ரத் தாங்களோ அடிக்கடி ஆண்டவன் தர்பாரில் ஆஜராகிறீர்கள். தயைக் கூர்ந்து என்னையும் அங்கு தங்களுடன் அழைத்துச் செல்வீர்களாகில் நான் என்னுடைய பீர், முர்ஷித் இன்னா ரென்பதையும் தங்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்கிறேன்.' இத்தேற்ற மொழிகளை கேட்டவுடன் ஹஸ்ரத் அமீர் குஸ்ருவுக்கு ஆறுதல் ஏற்பட்டது. அவர் மனம் ஒருவாறு சாந்தி அடைந்தது.

சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அமீர் குஸ்ரு தமது சேனையுடன் பானிபத் போக நேர்ந்தது. அப்போது அவர்கள் கலந்தர் சாஹிபுடன் சென்று சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்

சம்பாஷணைக்கிடையே மீண்டும் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவைப் பற்றின வரையில் முன் போலவே கூறியுள்ளார்கள்.

சமாளித்துக் கொண்டு தமது மீதி மிச்சமான பிரயாணத்தை முடித்துக் கொண்டார்களாயினும் "என்னுடைய குருவின் பெரும் பதவியை அறியாத இப்பேர்ப்பட்ட தர்வேஷ்களை நான் இனி ஒரு போதும் சந்தித்துப் பேச மாட்டேன்" என்று தீர்மானித்துக் கொண்டார்கள். டில்லிக்குத் திரும்பி வந்த போது அவர்கள் பெருந் துக்கத்துடனும் மனம் நொந்தும் நிலைமையிலும் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்களின் திரு ஆச்சிரமத்திற்கு வந்து சேர்ந்து வணக்கம் செலுத்தியதற்குப் பின் தம் துக்கத்தை கண்ணீர் ததும்ப முறை யிட்டார்கள். அதாவது :—இந்நிலைமை ஏற்படுவதற்கு முன் அவர்கள் மௌனமாய் ஹஸ்ரத் அவர்களுக்கு எதிரில் வந்து நின்ற போது ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள் க்ஷேமத்தை விசாரித்தப் பிறகு கேட்கிறார்கள்: குஸ்ருவே ; நீங்கள் பூஅலி கலந்தரைக் கண்டுப் பேசினீர்களா? அவர்களைப் பற்றிய தகவல் யாது? என்று விசாரிக்கவே இவர்கள் அழுது விட்டு, சர்க்கார்! என்ன சொல்லட்டும். அவர் என் உள்ளத்தில் அம்பு எய்தி விட்டார். என்னுடைய ஆத்துமாவையும் புண் படுத்தி விட்டார். அவர் சொன்னார், நான் உங்கள் ஷைகை ஆண்டவன் தர்பாரில் கண்டதில்லையே! என்று வாய்க்கூசாது பேசி விட்டார். இதை நான் மறக்க முடியவில்லை. என்ன செய்வேன்.

ஹஸ்ரத் சுல்தானுல் ஒளலியா அப்பொழுது சொல்கிறார்கள்! குஸ்ருவே! நீர் அடுத்தபடியாக எங்கள் பூஅலி கலந்தரை சந்திக்கும் பொழுது அவரிடம் சொல்லும், 'ஹஸ்ரத் தாங்களோ அடிக்கடி ஆண்டவன் தர்பாரில் ஆஜராகிறீர்கள். தயைக் கூர்ந்து என்னையும் அங்கு தங்களுடன் அழைத்துச் செல்வீர்களாகில் நான் என்னுடைய பீர், முர்ஷித் இன்னாரென்பதையும் தங்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்கிறேன்.' இத்தேற்ற மொழிகளை கேட்டவுடன் ஹஸ்ரத் அமீர் குஸ்ருவுக்கு ஆறுதல் ஏற்பட்டது. அவர் மனம் ஒருவாறு சாந்தி அடைந்தது.

சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அமீர் குஸ்ரு தமது சேனையுடன் பானிபத் போக நேர்ந்தது. அப்போது அவர்கள் கலந்தர் சாஹிபுடன் சென்று சாம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

சம்பாஷணைக்கிடையே மீண்டும் ஹஸ்ராத் நிஜாமுத்தீன் ஒளலியாவைப் பற்றின வரையில் முன் போலவே கூறியுள்ளார்கள்.

அப்போது அப்பெரியார், "நீங்கள் தேடுபவர்கள் இச்சபையில் இருப்பதற்கில்லை. அதோ இரண்டாவது தூரத்தில் உள்ள திரைக்குப் பின்னால் போங்கள்; அவர்களைக் காணலாம்" என்று சொன்னார்.

இருவரும் நன்றி செலுத்தி அங்கிருந்து அத்திரைக்குச் சென்றார்கள். அங்கும் ஓர் தர்பார் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மேதாவிகள், மிக்க மரியாதையுடன் சூழ்ந்து நிற்கிறார்கள். அங்கும் ஒருவர், "யாரைத் தேடுகிறீர்கள்" எனக் கேட்டார். இன்னாரை எனச் சொல்ல, "அதோ! பாருங்கள், முன்னால் ஐவான் திரை தொங்கிக் கொண்டிருக்கிறது அங்கே போங்கள், ஒருகால் அவர்கள் அங்கே இருப்பர்." என்றார். அங்கு போனதும் ஒருவர் எழுந்து, "நீங்கள் அனுமதியின்றி இதற்குள் செல்ல முடியாதே" என்றார்.

தாங்களே அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் அதற்கிணங்கினர். இவர்கள் உட்புகுந்தார்கள்.

அங்குள்ள காட்சியோ மனதைக் கவரத்தக்களவில் அவ்வளவு கம்பீரமாக இருந்தது. மத்தியிலுள்ள ஆசனத்தின் பேரில் வீற்றிருப்பவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அவர்களைச் சுற்றி எப்புறமும் அரும் பெரும் காதாக்களும், ஷுஹதாக்களும் இருந்து வருகிறார்கள்.

பெருமானார் அவர்களின் வலது புறம் ஹஜ்ரத் ஸைய்யிதினா ஸுல்தானுல் ஔலியா முஹையத்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரலி) அவர்கள் வீற்றிருக்க, இடது புறம் ஹஜ்ரத் ஸுல்தானுல் மஷாயிக் மஹபூபே இலாஹி நிஜாமுத்தீன் ஔலியா வீற்றிருக்கிறார்கள்.

உடனே ஹஜ்ரத் அமீர் குஸ்ரு அவர்கள், ஹஜ்ரத் கலந்தர் சாஹிப் அவர்கள் கையைப் பற்றி, "இதோ! பாருங்கள், என்னுடைய பீரோ முர்ஷித் வீற்றிருப்பதை" எனச் சொல்வதற்குள் பிரக்ஞை யற்றுப்போனார்கள். சிறிது நேரத்திற்குள் நற்சிந்தை வந்தது. அப்போது ஹஜ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுடன் ஹஜ்ரத் பூ அலி கலந்தர் அவர்களும் சமமான ஆசனத்தில் வீற்றிருக்கக் கண்டார்கள்.

இப்போது ஹஜ்ரத் கலந்தர் அவர்கள் மிக்க உற்சாகத்துடன் அமீர் குஸ்ருவுக்கு கைக்குலுக்கி, "சகோதரரே! உம்முடைய ஆதரவில் நான் உம்முடைய பீரோ முர்ஷித் அவர்களின் தரிசன பாக்கியத்தை அடைந்தேன். அவரது சிஷ்யராகிய நீரும் எனக்காக துஆ செய்யவேண்டும். அவர்கள் சமூகத்திற்கு போகும்போது என்னுடைய ஸலாமைச் சொல்லி துஆ செய்யுமாறு கோருவீர்.

ஸையிதினா ஷா அப்துல் ஹக் முஹத்திஸ் (ரஹ்) அவர்கள் தமது, 'அக்பாருல் அக்யார்' என்னும் கிதாபில் வரைந்திருப்பதாவது:— ஹஜ்ரத் கலந்தர் அவர்கள் தேவாசனையின் போதையில் மஸ்தாக இருந்து வருவார்கள். ஷரீஅத்து கட்டளைகளின்படி நடப்பிப்பதற்கு அவரிடஞ் சென்று சொல்ல எவருக்கும் துணிகரமில்லாதிருந்தது. எனினும் ஷரீஅத் உடைய உலமாக்களுக்கிடை ஒளலியாக்களையும் கௌரவிக்கப்பட்டு வந்தது.

ஹஜ்ரத் மவ்லானா ஜியாவுத்தீன் (ரஹ்) அப்போதைய மஹத்தான அறிவாளர். அவர்கள் சபையில் ஒரு நாள் ஹஜ்ரத் கலந்தர் அவர்களைப் பற்றியும், ஏதோ சிற்சில விஷயங்கள் பேசப்பட்டபோது அந்த அறிவாளர், "ஷைக் ஷர்புத்தீன் அவர்கள் சம்பூரணவலி என்பதற்குத் தடையில்லை, அவர் கலந்தரானா கொள்கைக் கோட்பாடுகளை அனுசரித்திருந்தால் தானென்ன? நான் அவர்கள் இடத்திற்குச் சென்று ஷரீஅத் கட்டளைகளைப் பிறப்பித்து வைப்பேன்" என்று அந்த அறிவாளர் சொன்னார்கள்.

ஹஜ்ரத் கலந்தர் சாஹிப் (ரஹ்) அவர்கள் தாடி, மீசை உரோமங்கள் வெட்டப்படாது, நீளமாக இருந்து வந்தன. எனவே மேற்கூறப்பட்ட அறிவாளர் தாமே கலந்தர் சாஹிப் (ரஹ்) அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். செல்வதற்கு முன், அவர்கள் பெரியதோர் கத்திரிக்கோலையும் கையில் எடுத்துக் கொண்டு போனார்கள். போனதும் உரோம அளவிற்குரிய மார்க்கக் கட்டளைகளை கலந்தர் அவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். கலந்தர் சாஹிப் (றஹ்) அவர்கள் உடனே பிடரியை சாய்க்க மவுலானா அவர்கள் கலந்தர் சாஹிபுடைய தாடி மீசை உரோமங்களை கணக்காய்க் கத்தரித்து சீர்படுத்தினார்கள்.

மவுலானா வெட்டி முடியும் வரையில் ஹஜ்ரத் கலந்தர் அவர்கள் பலதடவை மவுலானா அவர்களின் கைகளைப் பிடித்து முத்த

மிட்டு வந்தது மாத்திரமின்றி நபிகட்திலகம் (ஸல்) அவர்கள் புனித கட்டளைகளுக்கேற்ப கத்தரிக்கப்பட்டுவரும் இந்த தாடி எனக்கு மங்களமாகுக! என்று கோஷித்து வந்தார்கள்.

ஹஜ்ரத் பூ அலி கலந்தர் (ரஹ்) அவர்கள் பரமரகசியத் துறையில் மஹத்தான வழிகாட்டியாக வந்திருப்பவர்களாவர்.

தாங்கள் ஹிஜ்ரி 724-ம் ஆண்டு ரமலான் மீ[௳] வபாத் அடைந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. ஹஜ்ரத் மவுலானா ஸயித் கௌஸ் அலிஷா கலந்தர் (ரஹ்) அவர்கள் மகத்தான தௌஹீத் அறிவாளர்களாவர். ஒரு நாள், ஒருவர் அவர்களிடம் போய் ஹஜ்ரத் கலந்தர் சாஹிப் (ரஹ்) அவர்களின் சமாதி எங்கே இருக்கிறது? என்று கேட்க, அவர்கள் மூன்று இடங்களைச் சுட்டிக் கூறினார்கள். அதாவது:— பானிபட், கர்னல், புட்டாகேடா என்று.

அவர்களது விசுவாசிகள் இந்த மூன்று ஸ்தலங்களினின்றும் அவரவர்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப அனுக்கிரகம் பெறலாமெனச் சொன்னார்கள். வினவியவர் "ஹஸ்ரத் இதைத்தாங்கள் விளங்கக் கூறுவீர்களாக!" எனக்கேட்டபோது பின்வருமாறு விளக்கிக் கூறினார்கள் :—

113176

ஹஸ்ரத் பூஅலிகலந்தர் (ரஹ்) அவர்கள் தங்கள் உஸ்தாத் ஆகிய ஹஸ்ரத் ஹாபிஸ் சிராஜுத்தீன் மக்கி அவர்கள் சமுகத்தில் "இந்த பக்கிரியாகிய நான் உயிர் துறந்தப் பின்னர், என்னை பானிபத்தில் உள்ள இன்னவிடத்தில் நல்லடக்கம் செய்யவேண்டும்" என கேட்டுக் கொண்டார்கள்.

சிறிது காலத்திற்குப்பின்னர் தாங்கள் கர்னல் நோக்கிச் சென்றார்கள். அங்குள்ள தோர்க் காட்டில் மரக்கிளை யொன்றை பிடித்துக் கொண்டு காற்று வாங்கி நின்றார்கள். ஆண்டவன் செயல்! அவ்வமயமே! தங்களுக்கு வபாத்து நேர்ந்து விட்டது. ஜனங்கள் கேள்வியுற்றதும் அங்கு திரண்டு போய் ஜனாஸாவைக் கொண்டு வந்து தங்களை கர்னலிலேயே நல்லடக்கஞ் செய்து விட்டார்கள்.

அன்றிரவு நபிகட்திலகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கலந்தர் சாஹிபுக்கு உஸ்தாதான ஹஸ்ரத் சிராஜுத்தீன் மக்கி அவர்களுக்கு அதைப்பற்றி பின் வருமாறு சொர்ப்பனத்தில் கட்டளையிட்டார்கள். அதாவது:—

ஷர்புத்தின் கர்னல் ஸ்தலத்தில் காலமாய் விட்டபடியால் "நீர் அங்கு போய் அவரை பானிபத்திற்கு கொண்டு வந்து கல்லடக்கம் செய்து விடும்."

ஹஸ்ரத் சிராஜுத்தீன் கர்னலுக்கு விரைந்தோடினர். அவரது (கலந்தர் சாஹிபின்) புனிதவுடலத்தை பானிபத்திற்கு கொண்டுவர அரும்பாடு பட்டாராயினும் கர்னல் மக்கள் அதற்கு கிஞ்சித்தும் இணங்கவில்லை. அதன் பேரில் சண்டைசச்சரவும் ஏற்படும் போலாயிருந்தது.

ஹஸ்ரத் அவர்களின் மஹத்தான கராமாத்து

உறுதியாக சிராஜுத்தீன் சாஹிப் அவர்கள் போலி ஜனசா ஒன்றைத்தயாரித்து அதில் கலந்தர் சாஹிப் சமாதி அமைக்கப் பட்டிருந்த செங்கல் ஒன்றை எடுத்து வைத்து ஜனசாவைத்தூக்கிச் சென்றார்கள்.

அப்போது அவர்கள் தம்மனதில் 'இந்த கலந்தர் சாஹிப் சரியான ஔலியாவாக இருந்தால் அவரது புனிதமெய்யத்து இந்த ஜனசாவுக்குள் வந்து விடுகிறதா? பார்ப்போம் அதையும்' என்று எண்ணங்கொண்டார்கள்.

ஜனசா பானிபத்நகரின் சமீபத்தை அடைந்த போது அங்குள்ள பிரபு ஒருவர் உல்லாச பேடாவுக்காக அதுவழியே சென்று கொண்டிருந்தார். அவர் அதைக் கண்ணுற்றதும் இந்த ஜனசா யாருடையது? எனக் கேட்டார்.

தூக்கிச் சென்றவர்கள் இது ஹஸ்ரத் கலந்தர் சாஹிப் (ரஹ்) அவர்கள் ஜனசா வென்று பதிலளித்த போது அப்பிரபு அவருடன் தரிசிக்கும் ஆவலுடன் ஜனசாவை யணுகி மேற்போர்வையை நெற்றி தரிசித்தபோது உண்மையில் அது ஹஸ்ரத் பூஅலி கலந்தர் (ரஹ்) அவர்களின் புனிதஜடலமாகவே தென்பட்டது. பின்னர் மக்கள் எல்லோருங்கூடி ஜனசாவை பானிபத்நகருக்குள்கொண்டு வந்து கல்லடக்கம் செய்துள்ளார்கள்.

ஹஸ்ரத் கலந்தர்சாஹிப் (ரஹ்) அவர்களைப்பற்றியமற்றொரு விஷயத்து பின்வருமாறு வந்திருக்கிறது. அதாவது:—